DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.88/2015**

Deposition of :PW -15

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.மணிமாரன் | Caste: | |
| Father's Name | : திரு.ஆறுமுகம் | Calling: | |
| Husband's Name: | | | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |
| Date | : | | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 4th day of December-2023.

A1, A3, A4 and A6 Present. A2 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed.

**04.12.2023.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநெல்வேலி மாநகரம் நுண்ணறிவு பிரிவில் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2013 ஆம் வருடம் சேலம் மாநகரம் கன்னங்குறிச்சி காவல்நிலைய ஆய்வாளராக பணிபுரிந்தேன். 19.10.2013 தேதியன்று பகல் 14.15 மணிக்கு நான் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் போஸ்ட் அண்ணாநகர், காந்திபுரத்தை சேர்ந்த ராமசாமி என்பவரது மகன் பழனிவேல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று அதன் அடிப்படையில் ஒரு வழக்கினை நிலைய கு.எண்.261/2013 ஆக இதச 307 மற்றும் 302 ஆகிய பிரிவுகளின் படி பதிவு செய்தேன்.

புகார் ஏற்கனவே அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அச்சுப்படிவ

முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.32. புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றை நீதித்துறை நடுவர் எண்.4, சேலம் அவர்களுக்கு அனுப்பி வைத்து மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

நான் அந்த வழக்கினை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான கன்னங்குறிச்சி , மகேந்திரபுரி, பாலாஜி நகரிலுள்ள ராமகிருஷ்ணன் என்பவரது வீட்டிற்கு சென்று சாட்சிகள் சிவா, கிராம நிர்வாக அலுவலர், கன்னங்குறிச்சி மற்றும் மாணிக்கம், கிராம உதவியாளர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன்.

பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.33. பின்னர் சம்பவ இடத்திலிருந்த ராமகிருஷ்ணன் என்பவரது பிரேதத்தை மு.நி.கா.1678 முருகேசன் என்பவர் மூலமாகவும், ராஜசேகரன் என்பவரது பிரேதத்தை த.கா.1839 இளங்கோவன் என்பவர் மூலமாகவும் சேலம் அரசு மருத்துவமனையிலுள்ள சவக்கிடங்கிற்கு அனுப்பி வைத்தேன்.

பின்னர் கைரேகை நிபுணர்களை சம்பவ இடத்திற்கு வரவழைத்தேன்.மோப்ப நாயும் வரவழைக்கப்பட்டது. சம்பவ இடத்திலிருந்து இறந்துபோன ராமகிருஷ்ணன் தலைக்கு அடியில் இருந்த ரத்தக்கரை படிந்த டைல்ஸ் ஒன்றை மாதிரிக்காவும், ரத்தக்கரை படியாத டைல்ஸ் ஒன்றை மாதிரிக்காவும், இறந்துபோன ராமகிருஷ்ணன் தலைக்கு அடியில் இருந்த பச்சை மஞ்சள் நிறம்கொண்ட ரத்தக்கரை படிந்த சுமார் 2x1 அடி நீள அகலம் கொண்ட தலையணை உறை ஒன்றையும், இறந்துபோன ராஜசேகர் படுத்திருந்த பெட்டின் மேல் போடப்பட்டிருந்த ரத்தக்கரை படிந்த சுற்றிலும் புளூ கலர் கட்டம் போட்டு உள்ளே புளூ காபி கலர் கலந்து பூ போட்ட சுமார் 7x6 அடி நீள அகலம் கொண்ட படுக்கை விரிப்பு ஒன்றையும், இறந்துபோன ராஜசேகர் தலைக்கு அடியில் இருந்த பச்சை மஞ்சள் நிறம் கொண்ட ரத்தக்கரை படிந்த சுமார் 2x1 அடி நீளம் அகலம் கொண்ட தலையணை உறை ஒன்றையும், இறந்துபோன ராஜசேகர் படுத்திருந்த கட்டிலுக்கு கீழே ரத்தக்கரை சொட்டி ரத்தக்கறை படிந்த காவி காபி கலர் டைல்ஸ்

மாதிரிக்கு ஒன்றையும், ரத்தக்கறை படியாத காவி மற்றும் காபி கலர் டைல்ஸ் மாதிரிக்கு ஒன்றையும் ஒரு கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து 16.45 மணிக்கு கைப்பற்றினேன்.

அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னால் கைப்பற்றப்பட்ட கைப்பற்றுதல் மகஜரில் முதலாவது அயிட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள ரத்தக்கரை படிந்த டைல்ஸ் சா.பொ.24 ஆகவும், இரண்டாவது அயிட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள ரத்தக்கரை படியாத டைல்ஸ் சா.பொ.25 ஆகவும், 4 வது அயிட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள படுக்கை விரிப்பு சா.பொ.20 ஆகவும், 5 வது அயிட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள தலையணை உறை ஒன்று சா.பொ.21 ஆகவும், 6 மற்றும் 7 வது அயிட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள ரத்தக்கரை படிந்த மற்றும் படியாத டைல்ஸ்கள் சா.பொ.23 மற்றும் 26 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ( சா.பொ.26 தற்போது 4 துண்டுகளாக உடைந்த நிலையில் உள்ளது )

மூன்றாவது அயிட்டமாக தலையணை உறை ஒன்று என்று மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அந்த இடத்திலிருந்து இரண்டு ரத்தகரை படிந்த தலையணை உறைகளை கைப்பற்றியிருக்கிறேன். அதில் ஒன்று ஏற்கனவே சா.பொ.22 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தவறுதலாக அந்த இடத்திலிருந்து ஒரு தலையணை உறை மட்டுமே கைப்பற்றப்பட்டதாக குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் படிவம் 91 இல் இரண்டு தலையணை உறைகள் என்று குறிப்பிட்டிருக்கிறேன். அந்த மற்றொரு தலையணை உறை சா.பொ.30.

பின்னர் நான் சேலம் அரசு மருத்துவமனை சென்று அங்குள்ள சவக்கிடங்கின் முன்பாக வைத்து இறந்துபோன ராமகிருஷ்ணன் என்பவரது பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் 17.30 முதல் 20.00 மணி வரை பிரேத விசாரணைமேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.34.

பின்னர் அதே இடத்தில் வைத்து இறந்துபோன ராஜசேகர் என்பவர் உடலின் மீது பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் 20.00 முதல் 22.30 மணி வரை பிரேத விசாரணைமேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன்.

அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.35.

பின்னர் சாட்சிகள் பழனிவேல், சின்னப்பன், பெருமாயி, மேகநாதன், சதீஷ்குமார், கோவிந்தராஜ், சிவா, மாணிக்கம் ஆகியோர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்தேன்.

பிரேத விசாரணை முடிவடைந்ததிற்கு பின்னர் இறந்துபோன ராமகிருஷ்ணனது பிரேதத்தை முநி.கா. முருகேசன் என்பவர் மூலமாகவும், ராஜசேகரன் என்பவரது பிரேதத்தை த.கா.இளங்கோவன் என்பவர் மூலமகாவும் பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். அந்த வேண்டுகோள் கடிதங்கள் அ.சா.ஆ.22 மற்றும் 25 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

20.10.2013 அன்று சாட்சிகள் கிரேஸி, சேகர், அறிவுடைநம்பி, செல்வமாதவன், ராமசுந்தரம், சுப்புலட்சுமி, சரவணன், இளங்கோவன், முருகேசன் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்தேன். 21.10.2013 அன்று சாட்சிகள் சேட்டு, விஜயா, அலமேலு, பரிமளா, உமா, செல்வி ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்தேன்.

20.10.2013 அன்று இறந்துபோன நபர்களின் உடல்களின் மீது பிரேத பரிசோதனையானது மேற்கொள்ளப்பட்டது. அன்றைய தினமே உடல்களானது நல்லடக்கம் செய்யப்படுவதற்காக உறவினர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது.

சாட்சி சாட்சியம் அளிப்பதற்கு நீண்ட நேரம் எடுத்துக்கொள்ளுகிறார். அவர் ஆவணங்களை பார்வையிட்டு தன்னை சரியாக தயார் செய்துகொண்டு சாட்சியம் அளிக்க வரவில்லை. எனவே சாட்சியின் முதல்விசாரணை தொடர்ச்சியானது இத்துடன் நிறுத்தி வைக்கப்படுகிறது. சாட்சி வழக்கு சம்மந்தப்பட்ட கோப்புகளை நன்கு படித்துபார்த்துவிட்டு சரியான முறையில் சாட்சியம் அளிக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார். **முதல்விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.